www.tamilarangam.net

02.12.86.

**● விஜிதரன் விவகாரம்:**

# பல்கலைக்கழக மாணவர் யாத்திரை பல்வேறு இடங்களிலும் குறுக்கீடு!

## ஈ. பி. ஆர். எல். எவ். கண்டனம்

யாழ்ப்பாணம், திங்கள் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவன் க. விஜிதரன் காணாமற்போயுள்ளது தொடர்பாக வடபகுதியில் யாழ். பல்கலைக்கழக மாணவர்களால் நடத்தப்பட்டுவரும் பாதயாத்திரைகள் பல இடங்களில் குறுக்கீடு செய்யப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எவ்.) கண்டன அறிக்கையொன்றினை வெளியிட்டுள்ளது.

அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

"விஜிதரன் எங்கே? இயக்கங்களே பதில்சொல்லுங்கள்" எனக்கோரி யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் போராட்டம் தொடர்கின்றது. இந் நியாயமான கோரிக்கையை முன்வைத்து நடைபெறும் பாதயாத்திரையில் மாணவர்களும், ஆதரவளிக்கும் பொது மக்களும் தாக்கப்படும் சம்பவங்கள்

பட்டனர். மட்டுவிலில் அவர்கள் தங்கியிருந்த இடத்தில் எரிந்துகொண்டிருந்த மின் விளக்கு அடித்து உடைக்கப்பட்டு இருட்டுக்குள் மிருகத்தனமாகத் தாக்கப்பட்டுள்ளனர் இதனால் இருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று கட்டப்பிராயில் பாதயாத்திரையை வழிமறித்து அவ்விடத்தில் செய்தி சேகரிப்பதற்காக நின்ற எமது தோழர்களின் வீடியோ காமிராவைப் பறிக்க முற்பட்டதோடு பாதயாத்திரையில் வந்தவர்களையும் அநாகரீகமான முறையில் தாக்கியுள்ளனர்.

விஜிதரனுக்கு என்ன நேர்ந்தது என்று இன்றுவரை எதுவும் தெரியாமல் தமது நியாயமான கோரிக்கைக்காக பல்கலைக் கழக மாணவர் நடாத்தும் போராட்டத்திற்கு பொது மக்களும், பொதுஸ்தாபனங்களும் தமது பூரண ஆதரவை வழங்குதல் வேண்டும்.

அடாவடித்தனங்களும், அச்சுறுத்தல்களும் நீண்டகாலம் நிலைக்கப்போவதில்லை. உறுதியான போராட்டமே அராஜகத்தை தோற்கடிக்கும். இதன்மூலமே இனந்தெரியாதவர்களை இனங்காட்ட முடியும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்